**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 91/2022**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.02.2026** |
| **பெயர்** | **பாளையம் (எ) ஏழுமலை** |
| **த/பெ** | **பொன்னுசாமி** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.11.a.m**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

7. பொன்னுசாமிக்கும், காட்டையனுக்கும் எந்த வருடம் பாகம் பிரிந்தது என்றால் 1973 ஆண்டு ஆகும். 1973 ல் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் எனக்கு எப்படி நேரடியாக தெரியும் என்றால் நேரடியாக எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 30–ல் சர்வே எண் 91/1 லிருந்து 91/10 வரை விற்பனை செய்தது உண்மை தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தினை பாலகிருஷ்ணனுக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். காட்டையன் தான் விற்றுவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.சா.ஆ 4 ஆக எதிர் தரப்பு வழக்கறிஞர்**

ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

8. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 30–ல் குறிப்பிட்டுள்ள இரண்டு கிரைய லெட்டரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். வழக்கு சொத்த கிரைய லெட்டரில் வழக்கு சொத்து பிரதிவாதியின் பாகத்திற்கு வந்தடைந்த சொத்து என்றும் வாதிகளின் பாகத்தை ஏற்கனவே அவர்கள் விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. 10.05.1990–ல் காட்டையனுக்கு எனது தாயார் தான் 70 செண்ட் நிலத்தை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 தான் வழக்கு சொத்திற்கான பட்டா பொன்னுசாமியின் தந்தை பெயர் பட்டினத்தார் மகன் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அது யு.டி.ஆரில் தவறுதலாக பெயரிபாளையத்தான் என்பதற்கு பதிலாக பட்டினத்தார் என்று குறிப்பிட்டுள்ளது. பட்டாவை திருத்தல் செய்ய மனு செய்துள்ளோம்.

9. எங்கு மனு செய்துள்ளோம் என்றால் பதிவு துறையில் மனு செய்துள்ளோம். அதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் உரிமை கோருவதே வா.சா.ஆ 8 ஆவணத்தை பொறுத்து தான் அப்படி இருக்கும் பட்சத்தில் வா.சா.ஆ 8 ஆவணமே தவறுதலாக இருக்கும் போது அதனை குறித்து வாதிகள் உரிமை கோர எந்த அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழி பாகப்பிரிவினை தான் ஏற்பட்டது.

10. வாதுரையிலும் , வாக்குமூலத்திலும் கிழக்கு பக்கம் 20 அடி என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. என்படி கிழக்கு பக்கத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் கிழக்கு

பக்கம் பொன்னுசாமியின் மகனான காட்டையனுக்கு 96 செண்ட் மேற்கு பக்கம் பொன்னுசாமிக்கு 96 செண்டும் ஒதுக்கப்பட்டது. அதன்படி காட்டையனுக்கு ஒதுக்கப்பட்ட 96 செண்டை தான் காட்டையன் எனக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்று குறிப்பிட்டு இருக்கும்பட்சத்தில் அதே காட்டையன் 10.05.1990–ல் 70 செண்ட் நிலத்தை என் தாயார் சொக்கம்மாள் காட்டையனுக்கு கிரைய லெட்டர் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

11. அவ்வாறு இருக்கையில் நான் தவறுதலாக பிரதிவாதிகளுக்கு 26 செண்ட் தான் உள்ளது என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரிந்ததற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் இல்லை. வழக்கு சொத்து வாதிகளுக்கு உரிமையானது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 முதல் வா.சா.ஆ 7 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காகவே வாதிகளால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 9 சொத்தின் மதிப்பு எதற்காக தாக்கல் செய்தோம் என்றால் இந்த வழக்கிற்காக தாக்கல் செய்தோம்.

12. வழக்கு சொத்து பாகப்பிரிவினை நடந்தவிட்டது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று வழக்கு சொத்திற்கு பாகப்பிரிவினை கோரியோ, அல்லது விளம்புகை பரிகாரம் கோரியோ வழக்கினை தாக்கல்செய்யாமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. வழக்கு சொத்து காட்டையனுக்கு பாகமாக சென்றுவிட்ட சொத்து என்பதால் பிரதிவாதிகளுக்கு தான் உரிமை

உள்ளது என்றால் சரியல்ல. 01.08.2022 –ல் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் இடையூறு செய்ததாக குறிப்பிட்டு இருக்கும்பட்சதில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மேற்சொன்ன ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் எதுவும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 11.41.a.m.**